செய்தி வெளியீடு எண் : 1439 நாள் : 13.09.2024

**புதுப்பிக்கப்பட்டு திறக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் நினைவிடங்களை கடந்த சுமார் 200 நாட்களில்,**

**23 இலட்சத்து 21 ஆயிரம் நபர்கள் பார்வையிட்டிருக்கின்றார்கள்.**

**மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள் தகவல்.**

மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள் இன்று (13.09.2024) மெரினா கடற்கரையில் உள்ள முக்கிய சென்னையின் சுற்றுலாத்தலமான பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் நினைவிடங்களை நேரில் பார்வையிட்டு, பொதுமக்களின் வருகை குறித்தும், கலைஞர் உலகம் பகுதியில் செயல்பட்டு வரும் 7டி திரையரங்கம், பெரிய திரையரங்கம், காட்சியரங்கம், கலைஞர் அவர்களுடன் புகைப்படம் எடுத்துக்கொள்ள செய்யப்பட்டுள்ள பல்வேறு ஏற்பாடுகளை பொதுமக்கள் ஆர்வத்துடன் பயன்படுத்துவது குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது இளைய தலைமுறையினர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வரலாற்றினையும், அவரது சாதனைகளையும் ஆர்வத்துடன் பார்வையிடுவதையும், தன்புகைப்படம் எடுத்துக் கொள்வதையும் கண்டு அவர்களுடன் கலந்துரையாடினார்.

**பின்னர் மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது,**

செய்தித் துறையின் சார்பில் பராமரிக்கப்படக்கூடிய பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவிடம் புதுப்பிக்கப்பட்டும், மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடம் முழுமையாக பணிகள் பூர்த்தி செய்யப்பட்டும் கடந்த

26.02.2024 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

அதற்குப் பிறகு இன்றுவரை இந்த நினைவிடங்களை சுமார் 200 நாட்களில், ஏறத்தாழ 23 இலட்சத்து 21 ஆயிரம் நபர்கள் பார்வையிட்டிருக்கின்றார்கள். அதேபோல, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கலைஞர் உலகம் அருங்காட்சியகத்தை ஏறத்தாழ 2 இலட்சத்து 35 ஆயிரம் நபர்கள் இதுவரை பார்வையிட்டிருக்கின்றார்கள். கலைஞர் உலகம் அருங்காட்சியகம் ஒரு நாளைக்கு சராசரியாக சுமார் 1700 நபர்கள் பார்வையிடக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டு மக்கள் மட்டுமல்ல, வெளிநாடுகளிலிருந்து வரக்கூடியவர்களும் கலைஞர் உலகம் அருங்காட்சியகத்தை ஆர்வத்தோடு பார்வையிட்டு வருகின்றார்கள். பொதுமக்களிடம் முத்தமிழறிஞர் அவர்களின் புகழை கொண்டு சேர்க்கும் வகையில் கலைஞர் உலகம் பல தொழில் நுட்பங்களை உள்ளடக்கி வடிமைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள், குறிப்பாக இளைய தலைமுறையினர் இவற்றை பார்வையிட்டு பயன்பெற வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இந்த ஆய்வின்போது தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் திரு.வே.ராஜாராமன், இ.ஆ.ப, செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு.இரா.வைத்திநாதன், இ.ஆ.ப. கூடுதல் இயக்குநர் (செய்தி) திரு.ச.செல்வராஜ் உள்பட பொதுப்பணித்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu